## மக்கள் வங்கி - 2014

மக்கள் வங்கியின் (''வங்கி'') 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்கள், திரட்டிய வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மக்கள் வங்கியின் (வங்கி) மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் திரண்ட நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வை மேற் கொள்கையில் பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி எனக்கு கிடைத்திருந்தது. அந்நேரத்தில் 40 கிளைகளின் கணக்காய்விற்காக பொதுச் சேவையிலுள்ள 40 பட்டய கணக்காளர் நிறுவனங்களின் உதவிபெறப்பட்டது. துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக்கம்பனிகளினது உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனங்களினால் கணக்காய்வு செய்யப்பட்டன. கிளைகள் தொடர்பான விரிவான கணக்காய்வு அறிக்கைகள் 2015 பெப்ரவரி 18 இற்கும் ஏப்ரல் 22 இற்கும் இடையில் காலத்திற்கு காலம் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த அறிக்கைகளில் காணப்பட்ட சில கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆந் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் கட்டளை மூலம் சொல்லப்பட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆந்திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க அவரின் சுற்று நிரூபத்தின் மூலம் திறைசேரி செயலாளரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளிருந்தும் விலக்கழிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின்படி வழங்கப்படுகிறது.

### 1.2 திரண்ட நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, முறையான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவுசெய்து பிரயோகித்தல் மற்றும் அச்சூழ்நிலைகளிற்கு காரணமாகவிருக்கின்ற கணக்கீடு மதிப்பீடுகளைச் செய்தல் என்பன ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பிப்பதற்கு அவசியமானதென வடிவமைத்தல், அமுலாக்கல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை இப் பொறுப்பு உள்ளடக்குகின்றது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இத் திரட்டிய நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

திரண்ட நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக திரண்ட நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் திரண்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் திரண்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. திரண்ட நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் - வங்கி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க திரண்ட நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### அபிப்பிராயம் - தொகுதி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் திரண்ட நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 தொகுதி நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

வங்கியின் திரண்ட நிதிக் கூற்றுக்கள் வங்கியின் அவசியமான பகுதிகளாக இருக்கின்ற உள்நாட்டு வங்கியியல் பிரிவுகள், கடல்கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றினை கொண்டுள்ளது. தொகுதி நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகள் என்பவற்றின் திரண்ட நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைத்தலைக் கொண்டுள்ளது. வங்கியானது ஐந்தொகையிலுள்ளவாறு வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) இல் 99 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சீ இன் 75 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் பினான்ஸ் பிஎல்சீ 26.13 சதவீத பங்கு மூலதனம் மற்றும் வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) இன் 37.3 சதவீத பங்கு முலதனம் என்பவற்றனைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு கம்பனி மற்றும் இணைந்த கம்பனி தொடர்பில் முன்னைய ஆண்டுடன் ஒட்பிடப்பட்டு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் உரிமையாண்மை பின்வருமாறு இருந்தது.

| | நேரடி முதலீடுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2014 | % | 2013 | % |
| **துணைக்கம்பனிகளின் பெயர்** | **ரூபா 000** | | **ரூபா 000** | |
| வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) | 4,950 | 99 | 4,950 | 99 |
| வரையறுத்த பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சீ | 1,040,958 | 75 | 1,240,958 | 75 |
| **துணைக்கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடு** | **1,045,908** | | **1,245,908** | |
| **இணைந்த கம்பனிகளின் பெயர்** | | | | |
| வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் வங்கி பிஎல்சீ | 273,100 | 26.13 | 273,100 | 26.13 |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) | 25,000 | 37.3 | 25,000 | 37.3 |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடு** | **298,100** | | **298,100** | |
| கழி: நட்டஈட்டுக்கான ஏற்பாடு | | | | |
| வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் வங்கி பிஎல்சீ | - | | (65,532) | |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) | (25,000) | | (25,000) | |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடு** | **273,100** | | **207,568** | |

## 2.3. வங்கியின் திரண்ட நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**எல்கேஏஎஸ். 39 – நிதிக் கருவிகள்: அளவீடு மற்றும் அங்கீகாரம்** – வங்கியானது ஆக்கபூர்வமான வட்டி வீதத்தைப் (ஈஐஆர்) பயன்படுத்தி அதனை அனுமதிப்பதற்கு பதிலாக தனி வட்டி முறை அடிப்படையில் முதிர்ச்சியடைய உதவிபுரிந்த நிதிச் சொத்துக்களின் பெறுமதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே, திரட்டிய பெறுமதிக்கும் நிதிக் கூற்றில் அங்கீகரித்த பெறுமதிக்கும் இடையில் ரூபா 5,825,679 ஆன வித்தியாசமிருந்தது. மேலும், வங்கியானது ஆக்கபூர்வமான வட்டி வீதத்தைப் (ஈஐஆர்) பயன்படுத்தி அதனை அனுமதிப்பதற்கு பதிலாக தனி வட்டி முறை அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி பிணை முறிகளிற்காக (எஸ்எல்டிபி) வட்டி வருமானத்தை அங்கீகரித்திருந்தது.

**2.3.2. விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகை அடைவு பிடித்தல் கடன்கள் தொடர்பில் மக்களுடைய தானியங்கி வங்கியியல் முறைமையில் (பிஏபீஎஸ்) காட்டப்பட்ட தொகைக்கும் பொதுப் பேரேட்டின் கீழ் பதியப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 333,065,000 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) சில்வடேக் ஒருங்கிணைந்த வங்கியியல் முறைமை (எஸ்ஐபீஎஸ்) தரவு களஞ்சியத்தில் பதியப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு கணக்கு மீதிக்கும் மற்றும் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 6,542,966 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

**2.3.3. தொங்கல் கணக்குகள்**

07 தொங்கல் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 வரையும் தெளிவாக்கப்படாமல் ரூபா 204,459,968,000 ஆன தொகை இருந்தது.

**2.3.4. கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

வங்கியானது 2014 நவம்பர் 27 இல் ரூபா 90,300,000 கிரயத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளிடமிருந்து 9,030,000 பங்குகள் கொள்வனவு செய்திருந்தது.

**2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச் சட்டம் | வங்கியின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 20 மில்லியன் சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கியானது 999,960 பங்குகளை மாத்திரமே வழங்கியிருந்த போதிலும் பங்கீடு செய்யப்பட்டு காத்திருப்பவை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அதிமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை விஞ்சிய 143,040,000 பங்குகளிற்கு ரூபா 7,152 மில்லியன் தொகை சமமாக இருந்தது. எவ்வாறாயினும், மக்கள் வங்கியினுடைய அதிகாரச் சட்டத்தை திருத்துவதன் மூலம் இன்னமும் அதிகரிக்க வேண்டியிருந்த அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்காக பங்கீடு செய்யப்பட காத்திருக்கும் மூலதனக் கணக்கில் ரூபா 7,152 மில்லியன் இடம் பெற்றிருந்தது. |
| (ஆ) 2005 ஏப்ரல் 12 ஆம் திகதிய 02/17/402/0073/001 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் | மத்திய வங்கியின் வழிகாட்டல்களின்படி சகல அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் வரை அவர்களுடைய மூலதனத்தை அதிகரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கியானது அத்தேவைப்பட்ட மூலதனத்தை எய்தியிருக்காத சில வங்கிகளிற்கு 2006 இறுதியளவில் குறைந்தது 50 சதவீதத்தால் |

தொகையை உயர்த்துவதற்கு அனுமதித்திருந்ததுடன், 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் முழுமையாக அடையவதக்கு இருந்தது. எவ்வாறாயினும் வங்கியானது தேவைப்பட்ட மூலதனத்தை அடைந்திருக்காததுடன் 2014 திசெம்பர் 31 இல் நிலவிய அக்குறைபாடு ரூபா 2,450 மில்லியன் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் முறையே ரூபா 10,304 மில்லியன் மற்றும் ரூபா 13,412 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 17,231 மில்லியன் மற்றும் ரூபா 21,627 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைவித்திருந்தது. ஆதலால் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 6,927 மில்லியன் மற்றும் ரூபா 8,215 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 15,146 மில்லியன் மற்றும் ரூபா 14,490 மில்லியனால் முறையே வங்கி மற்றும் தொகுதியின் நிதிச் சொத்துக்கள் மீதான இழப்பீட்டு நட்டத்தை குறைத்தமை இந்த குறைவிற்கு பிரதான பங்களிப்பு செய்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 நிதிசார் விளைவுகளின் பொழிப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | | |
|---|---|---|---|---|
| | **2014** | | **2013** | |
| | **வங்கி** | **தொகுதி** | **வங்கி** | **தொகுதி** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| வட்டி வருமானம் | 84,480 | 104,181 | 110,440 | 129,205 |
| வட்டிச் செலவினம் | (54,362) | (64,211) | (73,791) | (84,245) |
| **தேறிய வட்டி வருமானம்** | **30,118** | **39,970** | **36,649** | **44,960** |
| ஏனைய வருமானம் | 11,776 | 14,338 | 9,880 | 10,616 |
| **செயற்பாட்டு வருமானம்** | **41,894** | **54,308** | **46,529** | **55,576** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான இழப்பீடு | 1,430 | 118 | (13,716) | (14,822) |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 43,324 | 54,426 | 32,813 | 40,754 |
| செயற்பாட்டுச் செலவினம் | (22,455) | (28,800) | (20,803) | (25,249) |

| | | | | |
|---|---|---|---|---|
| பெறுமதி சேர் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 20,869 | 25,626 | 12,010 | 15,505 |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி | (3,638) | (3,979) | (1,706) | (2,016) |
| **பெறுமதி சேர் வரிக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்** | **17,231** | **21,647** | **10,304** | **13,489** |
| இணைந்த கம்பனிகளின் இலாப/ (நட்டப்) பங்கு | - | (20) | - | (77) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **17,231** | **21,627** | **10,304** | **13,412** |
| வரிச் செலவினம் | (3,012) | (4,674) | (2,816) | (4,248) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **14,219** | **16,953** | **7,488** | **9,164** |

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான சில முக்கியமான விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியின் நியதிகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| | | **இலங்கை மத்திய வங்கி நியதிகள்** | **சதவீதத்தில் உள்ளபடியானது** | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **2014** | **2013** | **2012** | **2011** | **2010** |
| (அ) | போதிய மூலதன விகிதம் (தட்டு 1) | 5.00 | 10.9 | 10.4 | 9.8 | 9.6 | 7.9 |
| (ஆ) | போதிய மூலதன விகிதம் (தட்டு 1 + தட்டு 2) | 10.00 | 14.3 | 15.0 | 14.0 | 14.5 | 12.8 |
| (இ) | சொத்துக்களின் மீதான வருவாய் | - | 1.8 | 1.1 | 2.0 | 2.6 | 1.7 |
| (ஈ) | மொத்த முற்பணங்களிற்கான செயற்பாட்டு முற்பணங்கள் | - | 3.2 | 5.3 | 2.8 | 3.4 | 5.0 |
| (உ) | திரவ விகிதம் | | | | | | |
| | உள்நாட்டு வங்கியியல் பிரிவு | - | 30.3 | 25.2 | 21.8 | 21.5 | 23.4 |
| | வெளிநாட்டு நாணய வங்கியியல் பிரிவு | - | 21.8 | 22.3 | 21.8 | 24.0 | 22.3 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**கிளைச் செயலாற்றல் மற்றும் இலாபத்தன்மை**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 346 கிளைகளில், 291 கிளைகள் மீளமைக்கப்பட்ட செலவினங்களிற்கு முன்னர் ரூபா 10,048 மில்லியன் மொத்த இலாபத்தை பதிவுசெய்வதற்கு இயலக்கூடியதாக இருந்தது அதேநேரம், 55 கிளைகள் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,013 மில்லியன் மொத்த நட்டத்தை பதிவு செய்திருந்தது. இதன்படி, 346 கிளைகளில் தேறிய இலாபம் முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,293 மில்லியன் தேறிய நட்டத்திற்கு மேலாக மீளமைக்கப்பட்ட செலவினத்திற்கு முன்னர் ரூபா 9,035 மில்லியன் ஆக இருந்தது. ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 245 மில்லியன் அல்லது 2 சதவீத குறைவைக் காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கான வலய ரீதியான இலாபம்/ (நட்டம்) இன் பிரகாரம், வங்கியானது முன்னைய ஆண்டிற்கான மீளமைக்கப்பட்ட செலவினத்தின் பின்னர் ரூபா 3,168 மில்லியனிற்கு மேலாக மீளமைக்கப்பட்ட செலவினத்தின் பின்னர் ரூபா 2,594 மில்லியனாக நட்டமாக இருந்தது, ஆதலால், வலய ரீதியாக ரூபா 5,762 மில்லியன் அல்லது 222 சதவீதமான முன்னேற்றத்தைக் காட்டியது.

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வங்கியின் வலய வாரியான கிளை வலையமைப்பு மற்றும் அவற்றினுடைய இலாபத்தன்மை என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| **வலயம்** | **கிளைகளின் எண்ணிக்கை** | **இலாபம்/ (நட்டம்)** | **கிளைகளின் எண்ணிக்கை** | **இலாபம்/ (நட்டம்)** |
| | | **ரூபா மில்லியன்** | | **ரூபா மில்லியன்** |
| மத்திய வலயம் | 43 | 885 | 43 | 851 |
| கிழக்கு வலயம் | 29 | (242) | 29 | 118 |
| வட மத்திய வலயம் | 27 | 502 | 27 | 282 |
| தெற்கு வலயம் | 41 | 845 | 41 | 748 |
| சப்ரகமுவ வலயம் | 32 | 784 | 32 | 833 |
| மேல் மாகாண வலயம் I | 58 | 3,425 | 58 | 4,569 |
| மேல் மாகாண வலயம் II | 39 | 1,473 | 38 | 1,452 |
| வயம்ப வலயம் | 31 | 905 | 31 | 951 |
| வடக்கு வலயம் | 21 | (61) | 21 | 39 |
| ஊவா வலயம் | 25 | 519 | 25 | 450 |
| **மொத்தம்** | **346** | **9,035** | **345** | **10,293** |

| | | |
|---|---|---|
| **கழி:** | | |
| மீளமைப்பு செலவினம் | (5,867) | (12,887) |
| **மீளமைப்புச் செலவினத்தின் பின்னரான இலாபம் / (நட்டம்)** | **3,168** | **(2,594)** |

**4.2. கடன் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடன்கள் பதிவழித்தல்

மீளாய்வாண்டின் போது ரூபா 24,831,327 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான முதல் மற்றும் வட்டி பதிவழிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்)**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 18 கிளைகளிற்குள் ஒரு மில்லியனிற்கு மேலான 74 கடன்கள் தொடர்பில் ரூபா 361,688,737 ஆக நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி குறைந்தது ஒரு தவணைப்பணத்தையேனும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) 2006 இலிருந்து என்பிஏ பிரிவில் இரண்டு அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளிற்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 363,794,287 ஆக இருந்தது.

(iii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,878,244,564 மற்றும் ரூபா 631,248,295 கூட்டு மொத்த தொகையான பிரதான பத்து வாடிக்கையாளர்களின் முறையே செயற்பாடற்ற கடன்கள் மற்றும் வங்கி மேலதிக பற்றுக்கள் இருந்தது.

(iv) மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில், வாடிக்கையாளர்களிற்கு கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளால் வழங்கப்பட்ட ரூபா 150,020,348 கூட்டு மொத்தத் தொகையான கடன்கள் மற்றும் வங்கிமேலதிகப் பற்று வசதிகள் நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு உரிய காலத்தில் அல்லது முறையான நடவடிக்கை எடுக்காமல் பின்னர் செயற்பாடற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன என வெளிப்பட்டது. 2015 ஏப்ரல் 28 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகள் ரூபா 241,309,746 ஆக உள்ளன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கிளை | வழங்கப்பட்ட கடன்/ மேலதிகபற்று வசதிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட காலம் | வழங்கப்பட்ட மொத்தத் தொகை | 2015.04.28 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த தொகை (முதல் மற்றும் வட்டி உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| இரத்மலானை | 09 | 2008- 2012 | 11,258,450 | 26,247,657 |
| கதிர்காமம் | 02 | 2004- 2005 | 797,861 | 2,070,419 |

| | | | | |
|---|---|---|---|---|
| தலவாக்கல | 05 | 2006- 2013 | 2,672,474 | 4,576,708 |
| கடுவெல | 14 | 2006- 2011 | 33,005,307 | 52,862,432 |
| நித்தம்புவ | 10 | 2001- 2012 | 15,299,245 | 75,693,824 |
| ஜக்கல | 12 | 1996- 2013 | 86,987,011 | 79,858,706 |
| **மொத்தம்** | **52** | | **150,020,348** | **241,309,746** |

(v) வங்கியானது இருக்கின்ற வாடிக்கையாளருக்காக புதிய கணக்கு திறப்பதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல் வரலாற்றினை முறைப்படி மதிப்பாய்வு செய்ய வேண்டும். இருந்த போதிலும் இரத்மலானை கிளை வேறு கிளைகளில் பேணப்பட்டு இருக்கின்ற நடைமுறைக் கணக்கினை மதிப்பாய்வு செய்யாமல் புதிய நடைமுறைக் கணக்கொன்றினை 2012 ஓகஸ்ட் 07 இல் திறந்திருந்தது. பின்னர், அந்த கணக்ககள் செயற்பாடற்ற வகுதிகளிற்கு மாற்றப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கிளையின் பெயர் | கணக்கு திறக்கப்பட்ட திகதி | செயற்பாடற்ற வகுதிக்கு மாற்றப்பட்ட திகதி | 2015 யூலை 27 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன் மீதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| ❖ இரத்மலானை | 2002.09.26 | 2008.11.03 | 4,532,583 |
| ❖ மாத்தறை-உயனவத்தை | 2007.07.26 | 2008.08.04 | 1,768,988 |
| ❖ கந்தற | 2006.04.26 | 2008.11.24 | 32,604 |
| ❖ கந்தற | 1999.07.12 | 2009.02.25 | 434,634 |
| | | | **6,768,809** |

- 07 சந்தர்ப்பங்களில் 03 கிளைகளால் வழங்கப்பட்ட ரூபா 13,223,802 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் பின்னர் செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. 2015 மே 06 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருக்கின்ற மீதி ரூபா 34,320,954 ஆக இருந்தது. அந்த முற்பணங்கள் பிணைமுறியை பெற்றுக்கொள்ளாமல் வழங்கப்பட்டதிலிருந்து முற்பணத்தின் பொறுப்பு ஐயத்திற்கிடமாக உள்ளது.

| கிளைப் பெயர் | வழங்கப்பட்ட தொகை | 2015 மே 06 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருந்த தொகை | | |
|---|---|---|---|---|
| | | முதல் | வட்டி மற்றும் ஏனையவை | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இரத்மலானை | 3,160,000 | 3,160,000 | 4,792,941 | 7,952,941 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2,120,000 | 1,456,037 | 2,502,426 | 3,958,463 |
| | 718,916 | 694,560 | 537,044 | 1,231,604 |
| கடுவெல | 680,000 | 648,470 | 227,439 | 875,909 |
| நித்தம்புவ | 4,585,290 | 4,585,290 | 8,346,838 | 12,932,128 |
| | 1,382,236 | 1,382,236 | 5,101,079 | 6,483,315 |
| ஜக்கல | 577,360 | 577,360 | 309,234 | 886,594 |
| | **13,223,802** | **12,503,953** | **21,817,001** | **34,320,954** |

(இ) ஈடுவைக்கப்பட்ட ஆதனம் போதமை

2014 இல் 03 கிளைகளின் கீழ் 05 வாடிக்கையாளர் தொடர்பில் தொகுதி மதிப்பீட்டாளர்களால் வழங்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம், ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை முகப் பெறுமதி ரூபா 16,921,600 மாத்திரமாக இருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 06 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருக்கின்ற மீதி ரூபா 22,142,006 ஆல் ஆதனங்களின் முகப் பெறுமதியை விஞ்சி ரூபா 39,063,606 ஆக இருந்தது.

| **கிளை** | **கடன்கள் மற்றும் மேலதிக பற்றுக்களின் எண்ணிக்கை** | **2015 மே 06 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த மீதி** | | | **விற்பனை முகப் பெறுமதி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|---|---|---|
| | | **முதல்** | **வட்டி மற்றும் ஏனையவை** | **மொத்தம்** | | |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| கடுவெல | 02 | 4,217,417 | 3,392,203 | 7,609,620 | 2,100,000 | (5,509,620) |
| | 02 | 3,752,630 | 5,061,979 | 8,814,609 | 7,000,000 | (1,814,609) |
| | 01 | 1,161,112 | 1,039,062 | 2,200,174 | 1,100,000 | (1,100,174) |
| நித்தம்புவ | 05 | 6,587,326 | 11,524,840 | 18,112,166 | 5,000,000 | (13,112,166) |
| ஜக்கல | 03 | 1,270,025 | 1,057,012 | 2,327,037 | 1,721,600 | (605,437) |
| **மொத்தம்** | | **16,988,510** | **22,075,096** | **39,063,606** | **16,921,600** | **(22,142,006)** |

(ஈ) அரச கூட்டுத்தாபனங்களிற்கு கடனளித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. வங்கியானது அரச கூட்டுத்தாபனங்களிற்கு பல இறக்குமதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 176,038 மில்லியனாக இருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட மொத்த நிலுவையாகவிருக்கின்ற இறக்குமதி வசதிகளின் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என அவதானிக்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்

வெளிப்பாடுகள் பின்வருமாறு உள்ளன.

| வசதிகளின் வகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறவேண்டிய தொகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மொத்த நிலுவையின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| கடன் பத்திரங்கள் | 26,248.31 | 57,471.64 | 46 |
| கடன் ஏற்பனவுகள் | 29,515.20 | 43,502.80 | 68 |
| வெளிநாட்டு நாணய கடன்கள் | 120,273.61 | 142,338.59 | 84 |
| வங்கி உத்தரவாதங்கள் | 1.05 | 36,863.67 | 0.003 |
| **மொத்த வெளிப்பாடு** | **176,038.17** | **280,176.70** | **63** |

ii. வங்கியானது கூட்டுத்தாபனத்தின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட வீதி ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்துவதற்கு திறைசேரி முன்காப்பீடுகளில் ரூபா 14,585,855,096 மற்றும் ஐ.அ.டொலர் 44,717,825 தொகையான கடன் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வங்கியானது கூட்டுத்தாபனத்தின் கணக்காளரால் செய்யப்பட்ட சிபார்சுகளில் மாத்திரம் 2014 யூலை 23 வரை ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 13,925,559,767 மற்றும் ஐ.அ.டொலர் 39,825,960 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தகாரர்களிற்கு நிதிகளை பணவளிப்பு செய்வதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கு முறையான பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வீதி செயற்திட்டம் | அனுமதிக்கப்பட்ட தொகை | வழங்கிய திகதி | வழங்கிய தொகை | 2015.07.16 இல் உள்ளவாறு நிலுவையிலுள்ள முதல் | 2015.07.16 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டி மற்றும் பனல் கட்டணங்கள் | 2015.07.16 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கட்டுவானை – அலுப்பொத்தனியா (004-8001-000005263) | 2,328.36 | 2012.03.20 | 1,975.36 | 1,839.12 | 81.12 | 1,920.25 |
| நரம்மல – கிருல்ல (0048001-000005281) | 1,400.00 | 2012.03.28 | 1,223.16 | 1,164.82 | 52.01 | 1,216.83 |
| இப்பாகமுவ-கும்புக்கேரி (0048001-000005325) | 2,861.81 | 2012.04.02 | 2,739.47 | 2,620.23 | 117.14 | 2,737.37 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம்-திருகோணமலை (0048001-000005343) | 7,995.68 | 2012.04.02 | 7,987.57 | 7,654.42 | 465.29 | 8,119.70 |
| **மொத்தம்** | **14,585.85** | | **13,925.56** | **13,278.59** | **715.56** | **13,994.15** |
| கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப்பாதை ((0048002-000000427) | ஐ.அ.டொலர் 44.72 | 2014.09.29 | ஐ.அ.டொலர் 39.82 | ஐ.அ.டொலர் 39.82 | ஐ.அ.டொலர் 1.07 | ஐ.அ.டொலர் 40.90 |

(உ) உத்தியோகத்தர் கடன்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது செயற்பாடற்ற உத்தியோகத்தர் கடன்களின் மீதி ரூபா 260 மில்லியன் தொடக்கம் ரூபா 336 மில்லியன் வரை அதிகரித்திருந்த போதிலும் முகாமைத்துவம் அந்த நிலுவைகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மரணமடைந்த, இடைநிறுத்தப்பட்ட, நிறுத்தப்பட்ட மற்றும் சம்பளமற்ற விடுமுறையிலுள்ளோர் போன்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் அறவீட்டிற்காக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வங்கியில் தற்போது வேலைசெய்கின்ற உத்தியோகத்தர்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 14,544,324 தொகையான கடன்கள் செயற்பாடற்ற வகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 யூலை 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர் கடன் பிரிவால் தயாரிக்கப்பட்ட செயற்பாடற்ற கடன் பட்டியலின் பிரகாரம், மீள இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் (ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்த பின்னர்) ரூபா 70,457,707 ஆன நிலுவை மீதிகள் இருந்தது.

(v) ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களிலிருந்து பிணையற்றிருந்த ரூபா 4,051,844 (மூலதனம் ரூபா 3,637,282 மற்றும் வட்டி ரூபா 414,562) தொகையான நிலுவையாகவிருக்கின்ற செயற்பாடற்ற கடன் மீதி 67 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாமல் இருந்தது. மேலும் நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடாமல் ஓய்வுபெற்ற ஊழியர்களிற்கு சொந்தமான சகல ஓய்வூதிய நலன்களும் அவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(vi) வங்கியானது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 131,360,666 தொயையான உத்தியோகத்தர் கடன்களிற்காக ஏற்பாடொன்றினை செய்திருந்தது.

(ஊ) காசு எல்லை கடன்கள்

மாதாந்தம் திருப்பிச்செலுத்தும் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 34.9 மில்லியன் பெறுமதியான காசு எல்லை கடன்கள் இருக்கின்ற பிணையாளர்களிடமிருந்து அறவிடாமல் 2015 பெப்ரவரி 01 இல் செயற்பாடற்ற

வகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

## 5. முறைமைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்
(ஆ) கடன் நிர்வாகம்
(இ) இனங்காணப்படாத வித்தியாசங்கள்
(ஈ) தொங்கல் கணக்குகள்
(உ) கிளைச் செயற்பாடுகள் மற்றும் இலாபத்தன்மை
(ஊ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு